سُوْرَةُ النَّجْمِ مَكِّيَّةٌ وَّهِيَ اِثْنَتَانِ وَّسِتُّوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالنَّجْمِ اِذَا هَوٰى ﴿١﴾ مَا ضَلَّ صَاحِبُكُمْ وَمَا غَوٰى ﴿٢﴾ وَمَا يَنْطِقُ عَنِ
الْهَوٰى ﴿٣﴾ اِنْ هُوَ اِلَّا وَحْيٌ يُّوْحٰى ﴿٤﴾ عَلَّمَهٗ شَدِيْدُ الْقُوٰى ﴿٥﴾ ذُوْ
مِرَّةٍ فَاسْتَوٰى ﴿٦﴾ وَهُوَ بِالْاُفُقِ الْاَعْلٰى ﴿٧﴾ ثُمَّ دَنَا فَتَدَلّٰى ﴿٨﴾
فَكَانَ قَابَ قَوْسَيْنِ اَوْ اَدْنٰى ﴿٩﴾ فَاَوْحٰى اِلٰى عَبْدِهٖ مَا اَوْحٰى ﴿١٠﴾ مَا
كَذَبَ الْفُؤَادُ مَا رَاٰى ﴿١١﴾ اَفَتُمٰرُوْنَهٗ عَلٰى مَا يَرٰى ﴿١٢﴾ وَلَقَدْ رَاٰهُ
نَزْلَةً اُخْرٰى ﴿١٣﴾ عِنْدَ سِدْرَةِ الْمُنْتَهٰى ﴿١٤﴾ عِنْدَهَا جَنَّةُ الْمَاْوٰى ﴿١٥﴾
اِذْ يَغْشَى السِّدْرَةَ مَا يَغْشٰى ﴿١٦﴾ مَا زَاغَ الْبَصَرُ وَمَا طَغٰى ﴿١٧﴾
لَقَدْ رَاٰى مِنْ اٰيٰتِ رَبِّهِ الْكُبْرٰى ﴿١٨﴾ اَفَرَءَيْتُمُ اللّٰتَ وَالْعُزّٰى ﴿١٩﴾
وَمَنٰوةَ الثَّالِثَةَ الْاُخْرٰى ﴿٢٠﴾ اَلَكُمُ الذَّكَرُ وَلَهُ الْاُنْثٰى ﴿٢١﴾
تِلْكَ اِذًا قِسْمَةٌ ضِيْزٰى ﴿٢٢﴾ اِنْ هِيَ اِلَّا اَسْمَآءٌ سَمَّيْتُمُوْهَا اَنْتُمْ
وَاٰبَآؤُكُمْ مَّآ اَنْزَلَ اللّٰهُ بِهَا مِنْ سُلْطٰنٍ اِنْ يَّتَّبِعُوْنَ
اِلَّا الظَّنَّ وَمَا تَهْوَى الْاَنْفُسُ وَلَقَدْ جَآءَهُمْ مِّنْ رَّبِّهِمُ
الْهُدٰى ﴿٢٣﴾ اَمْ لِلْاِنْسَانِ مَا تَمَنّٰى ﴿٢٤﴾ فَلِلّٰهِ الْاٰخِرَةُ وَالْاُوْلٰى ﴿٢٥﴾ ع ١ ٥

அத்தியாயம் : 53

## அந்நஜ்மு _ நட்சத்திரம்

வசனங்கள் : 62 மக்கீ ருகூஃகள் : 3

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1. நட்சத்திரத்தின் மீது சத்தியமாக; அது விழுந்து (மறைந்து) விடும் சமயத்தில்_
2. (நம்முடைய தூதராகிய) உங்களின் தோழர் வழி தவறிவிடவுமில்லை; அவர் தவறான வழியில் செல்லவுமில்லை.
3. அவர் தன் மன இச்சையின்படி (எதையும்) பேசுவதுமில்லை.
4. இது அறிவிக்கப்படும் (வஹீயாகிய) அறிவிப்பே தவிர (வேறு) இல்லை.
5. (ஜிப்ரீல் என்னும்) மிகக்கடின பலமுடையவர் இதனை அவருக்குக் கற்றுக் கொடுத்தார்.
6. அவர் அழகான தோற்றமுடையவர்; பின்னர் (தன் இயற்கை உருவத்தில் நமது நபியின் முன் மிஃராஜ் பயணத்தின்போது) உயர்ந்து சரியாக நின்றார்.
7. அப்போது (ஜிப்ரீலாகிய) அவர் மிக உயர்ந்த(கீழ் வானத்தின்) கடைக் கோடியிலிருக்க,
8. அதன் பின்னர் அவர் (நம் தூதர்பால்) நெருங்கி, அப்பால் அருகே வந்தார்.
9. அ(ந்நெருக்கத்தின் அளவான)து (வளைந்த) வில்லின் இரு முனைகளைப்போல் அல்லது அதைவிடச் சமீபமாக இருந்தது.
10. பிறகு (அல்லாஹ்வாகிய) அவன், அவருக்கு அறிவித்ததையெல்லாம் அவர், அவனுடைய அடியாருக்கு அறிவித்தார்.
11. (நபியுடைய) இதயம், தான் கண்டதை பற்றிப் பொய்யுரைக்கவில்லை.
12. (அல்லாஹ் அந்த இரவில் தன் அடியாருக்குக் காண்பித்து) அவர் கண்டது பற்றி, நீங்கள் (சந்தேகித்து) அவருடன் தர்க்கம் செய்கின்றீர்களா?
13. அன்றியும், நிச்சயமாக அவர் மற்றொரு முறை (ஜிப்ரீலை அவரது சுயஉருவில்) இறங்கக் கண்டிருக்கிறார்.
14. ஸித்ரத்துல் முன்தஹா என்னும் (இலந்தை மரத்தின்) இடத்தில் (இக்காட்சி நிகழ்ந்தது).
15. அவ்விடத்தில் தான் (நல்லடியார்கள்) தங்கும் சொர்க்கம் இருக்கின்றது.
16. இலந்தைமரத்தை மூடிக்கொள்ளும் ஒன்று மூடிக் கொண்டபோது _
17. (அதிலிருந்து அவருடைய) பார்வை சறுகிவிடவில்லை; (எல்லையைக்) கடந்துவிடவுமில்லை.
18. நிச்சயமாக, அவர் தன் இரட்சகனின் அத்தாட்சிகளில் மிகப் பெரியதைக் கண்டார்.
19. நீங்கள் (வணங்கும்) லாத்தையும், உஜ்ஜாவையும் கண்டீர்களா?
20. மற்றொன்றாகிய_மூன்றாவதான மனாத் (என்னும் பெண் விக்ரகத்)தையும் (நீங்கள் கண்டீர்களா?)
21. உங்களுக்கு ஆண்(மக்)கள், இன்னும், அவனுக்குப் பெண்(மக்)களா?
22. அவ்வாறாயின், அது மிக்க அநியாயமான பங்கீடாகும்.
23. இவையெல்லாம் நீங்களும், உங்கள் மூதாதையரும் வைத்துக்கொண்ட (வெறும்) பெயர்களே தவிர இல்லை; அ(வை தெய்வங்களென்ப)தற்காக அல்லாஹ் (உங்களுக்கு) யாதொரு சான்றையும் (முந்திய எந்த வேதத்திலும்) இறக்கி வைக்கவில்லை; அவர்கள் வீண் எண்ணத்தையும், மனங்கள் விரும்புவனவற்றையும் தவிர (வேறு எதையும்) பின்பற்றவில்லை; நிச்சயமாக அவர்கள் இரட்சகனிடமிருந்து அவர்களுக்கு நேர் வழி வந்துவிட்டது; (ஆனால், அதனை அவர்கள் பின்பற்றுவதில்லை.)
24. அல்லது, மனிதனுக்கு அவன் விரும்பியது உண்டா? (அவனுக்குக் கிடைத்து விடுமா? இல்லை!)
25. ஆகவே, மறுமையும், இம்மையும் அல்லாஹ்விற்கே உரியதாகும்.

وَكَمْ مِّنْ مَّلَكٍ فِی السَّمٰوٰتِ لَا تُغْنِیْ شَفَاعَتُهُمْ شَیْـًٔا اِلَّا مِنْۢ
بَعْدِ اَنْ یَّاْذَنَ اللّٰهُ لِمَنْ یَّشَآءُ وَیَرْضٰی ﴿۲۶﴾ اِنَّ الَّذِیْنَ لَا یُؤْمِنُوْنَ
بِالْاٰخِرَةِ لَیُسَمُّوْنَ الْمَلٰٓىِٕكَةَ تَسْمِیَةَ الْاُنْثٰی ﴿۲۷﴾ وَمَا لَهُمْ بِهٖ مِنْ
عِلْمٍ ؕ اِنْ یَّتَّبِعُوْنَ اِلَّا الظَّنَّ ۚ وَاِنَّ الظَّنَّ لَا یُغْنِیْ مِنَ الْحَقِّ
شَیْـًٔا ﴿۲۸﴾ فَاَعْرِضْ عَنْ مَّنْ تَوَلّٰی ۙ۬ عَنْ ذِكْرِنَا وَلَمْ یُرِدْ اِلَّا الْحَیٰوةَ
الدُّنْیَا ﴿۲۹﴾ ذٰلِكَ مَبْلَغُهُمْ مِّنَ الْعِلْمِ ؕ اِنَّ رَبَّكَ هُوَ اَعْلَمُ بِمَنْ
ضَلَّ عَنْ سَبِیْلِهٖ وَهُوَ اَعْلَمُ بِمَنِ اهْتَدٰی ﴿۳۰﴾ وَلِلّٰهِ مَا فِی الربع
السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ۙ لِیَجْزِیَ الَّذِیْنَ اَسَآءُوْا بِمَا عَمِلُوْا
وَیَجْزِیَ الَّذِیْنَ اَحْسَنُوْا بِالْحُسْنٰی ﴿۳۱﴾ اَلَّذِیْنَ یَجْتَنِبُوْنَ كَبٰٓىِٕرَ الْاِثْمِ
وَالْفَوَاحِشَ اِلَّا اللَّمَمَ ؕ اِنَّ رَبَّكَ وَاسِعُ الْمَغْفِرَةِ ؕ هُوَ اَعْلَمُ بِكُمْ اِذْ
اَنْشَاَكُمْ مِّنَ الْاَرْضِ وَاِذْ اَنْتُمْ اَجِنَّةٌ فِیْ بُطُوْنِ اُمَّهٰتِكُمْ ۚ فَلَا تُزَكُّوْٓا
اَنْفُسَكُمْ ؕ هُوَ اَعْلَمُ بِمَنِ اتَّقٰی ﴿۳۲﴾ ع اَفَرَءَیْتَ الَّذِیْ تَوَلّٰی ۙ ﴿۳۳﴾ وَاَعْطٰی ۲ ع ۲
قَلِیْلًا وَّاَكْدٰی ﴿۳۴﴾ اَعِنْدَهٗ عِلْمُ الْغَیْبِ فَهُوَ یَرٰی ﴿۳۵﴾ اَمْ لَمْ یُنَبَّاْ
بِمَا فِیْ صُحُفِ مُوْسٰی ۙ ﴿۳۶﴾ وَاِبْرٰهِیْمَ الَّذِیْ وَفّٰۤی ۙ ﴿۳۷﴾ اَلَّا تَزِرُ
وَازِرَةٌ وِّزْرَ اُخْرٰی ۙ ﴿۳۸﴾ وَاَنْ لَّیْسَ لِلْاِنْسَانِ اِلَّا مَا سَعٰی ۙ ﴿۳۹﴾

26. அன்றியும், வானங்களில் எத்தனையோ மலக்குகள் இருக்கின்றனர்; அல்லாஹ், தான் நாடியோருக்கு அனுமதியளித்து, அவன் திருப்தியும் கொண்ட பின்னரே தவிர அவர்களின் பரிந்துரை (எவருக்காகவும்) யாதொரு பயனுமளிக்காது.

27. நிச்சயமாக மறுமையைப்பற்றி நம்பவில்லையே அத்தகையோர்_ அவர்கள் மலக்குகளுக்குப் பெண்களின் பெயர்களைச் சூட்டுகின்றனர்.

28. இதைப்பற்றி அவர்களுக்கு எவ்வித அறிவுமில்லை; (வீண்) எண்ணத்தைத் தவிர,(வேறு எதையும்) அவர்கள் பின்பற்றுவதில்லை; நிச்சயமாக வீண் எண்ணம் உண்மையிலிருந்து(அதற்கு எதிராக) யாதொரு பலனையும் அளிக்காது.

29. (நபியே!) எவன் நம்மை நினைவு கூர்வதைவிட்டும் முகம்திருப்பிக் கொண்டானோ, அவனை நீர் புறக்கணித்துவிடும்; இவ்வுலக வாழ்க்கையைத் தவிர வேறு எதையும் அவன் நாடவில்லை.

30. அதுதான் கல்வியறிவில் அவர்களின் எல்லையாகும். (இதற்கப்பால்) நிச்சயமாக உமதிரட்சகன், தன்னுடைய வழியிலிருந்து தவறியவர் யாரென்பதையும் மிகஅறிந்தவன்; அவனே நேர்வழி செல்பவனையும் மிகஅறிந்தவன்.

31. மேலும், வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்விற்கே உரியன; ஆகவே, தீமை செய்தோருக்கு அவர்களுடைய (தீ) வினைக்குத்தக்கவாறு (தீமையைக்) கூலியாகக்கொடுப்பதற்காகவும், நன்மைசெய்தோருக்கு நன்மையைக் கூலியாகக் கொடுப்பதற்காகவும் (மறுமையை பிற்படுத்தி வைத்திருக்கின்றான்).

32. அவர்கள் எத்தகையோரென்றால், (தவிர்க்கமுடியாத) சிறு பாவங்கள் தவிர, மற்ற பெரும் பாவங்களையும், மானக்கேடான விஷயங்களையும் தவிர்த்துக் கொள்கிறார்கள்; நிச்சயமாக உமதிரட்சகன் மன்னிப்பதில் மிக்க தாராளமானவன்; உங்களை பூமியிலிருந்து உற்பத்திச் செய்த சமயத்திலும், இன்னும் நீங்கள் உங்கள் தாய்மார்களின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த சமயத்திலும், உங்களைப்பற்றி அவன் மிக அறிந்தவன்; ஆகவே நீங்களே உங்களை (தூய்மையானவர்களென எண்ணிக்கொண்டு) பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டாம்; (உங்களில்) பயபக்தியுடையவர் யார் என்பதை அவனே நன்கறிவான்.

33. (நபியே! சத்தியத்தைப் பின்பற்றுவதை விட்டும்) புறக்கணித்தானே அத்தகையவனை நீர் பார்த்தீரா?

34. அவன்(வாக்களித்ததில்) குறைவாகக்கொடுத்தான்; பிறகு (பெரும் பகுதியை) தடுத்துக்கொண்டான்.

35. (வாக்குறுதிக்கு மாறாக நடக்கும்) அவனிடம் மறைவானது பற்றிய அறிவு இருந்து அப்பால்(அதன் மூலம் மறைவானதை)அவன் பார்க்கிறானா?

36. அல்லது மூஸாவின் ஆகமங்களில் இருப்பதைக்கொண்டு அவன் அறிவிக்கப் படவில்லையா?

37. (அல்லது அல்லாஹ்வுடைய கட்டளைகளைப்) பூரணமாக நிறைவேற்றிய இப்றாஹீமை (அவருடைய ஆகமங்களில் இருப்பதை)க்கொண்டும் (அவனுக்கு அறிவிக்கப் படவில்லையா?).

38. (அதாவது, குற்றம் செய்ததற்காக பாவச்சுமையை) சுமக்கக்கூடியது எதுவும் மற்றொரு(ஆத்மாவின் பாவச்)சுமையைச் சுமக்காது.

39. இன்னும், மனிதனுக்கு அவன் முயற்சித்தது (சம்பாதித்தது) தவிர வேறில்லை.

وَاَنَّ سَعْيَهٗ سَوْفَ يُرٰى ﴿۴۰﴾ ثُمَّ يُجْزٰىهُ الْجَزَآءَ الْاَوْفٰى ﴿۴۱﴾ وَاَنَّ اِلٰى
رَبِّكَ الْمُنْتَهٰى ﴿۴۲﴾ وَاَنَّهٗ هُوَ اَضْحَكَ وَاَبْكٰى ﴿۴۳﴾ وَاَنَّهٗ هُوَ اَمَاتَ وَ
اَحْيَا ﴿۴۴﴾ وَاَنَّهٗ خَلَقَ الزَّوْجَيْنِ الذَّكَرَ وَالْاُنْثٰى ﴿۴۵﴾ مِنْ نُّطْفَةٍ
اِذَا تُمْنٰى ﴿۴۶﴾ وَاَنَّ عَلَيْهِ النَّشْاَةَ الْاُخْرٰى ﴿۴۷﴾ وَاَنَّهٗ هُوَ اَغْنٰى وَ
اَقْنٰى ﴿۴۸﴾ وَاَنَّهٗ هُوَ رَبُّ الشِّعْرٰى ﴿۴۹﴾ وَاَنَّهٗۤ اَهْلَكَ عَادَا ِۨالْاُوْلٰى ﴿۵۰﴾
وَثَمُوْدَاۡ فَمَاۤ اَبْقٰى ﴿۵۱﴾ وَقَوْمَ نُوْحٍ مِّنْ قَبْلُ ؕ اِنَّهُمْ كَانُوْا هُمْ اَظْلَمَ
وَاَطْغٰى ﴿۵۲﴾ وَالْمُؤْتَفِكَةَ اَهْوٰى ﴿۵۳﴾ فَغَشّٰىهَا مَا غَشّٰى ﴿۵۴﴾ فَبِاَىِّ اٰلَآءِ
رَبِّكَ تَتَمَارٰى ﴿۵۵﴾ هٰذَا نَذِيْرٌ مِّنَ النُّذُرِ الْاُوْلٰى ﴿۵۶﴾ اَزِفَتِ
الْاٰزِفَةُ ﴿۵۷﴾ لَيْسَ لَهَا مِنْ دُوْنِ اللّٰهِ كَاشِفَةٌ ﴿۵۸﴾ اَفَمِنْ هٰذَا
الْحَدِيْثِ تَعْجَبُوْنَ ﴿۵۹﴾ وَتَضْحَكُوْنَ وَلَا تَبْكُوْنَ ﴿۶۰﴾ وَاَنْتُمْ
سٰمِدُوْنَ ﴿۶۱﴾ فَاسْجُدُوْا لِلّٰهِ وَاعْبُدُوْا ﴿۶۲﴾ السجدة ع ۳ / ۷ السجدة ۱۳

سُوْرَةُ الْقَمَرِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسٌ وَّخَمْسُوْنَ اٰيَةً وَّثَلٰثُ رُكُوْعَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اِقْتَرَبَتِ السَّاعَةُ وَانْشَقَّ الْقَمَرُ ﴿۱﴾ وَاِنْ يَّرَوْا اٰيَةً يُّعْرِضُوْا وَيَقُوْلُوْا
سِحْرٌ مُّسْتَمِرٌّ ﴿۲﴾ وَكَذَّبُوْا وَاتَّبَعُوْۤا اَهْوَآءَهُمْ وَكُلُّ اَمْرٍ مُّسْتَقِرٌّ ﴿۳﴾

40. இன்னும், நிச்சயமாக அவனுடைய முயற்சி(யின் பலன் அவனுக்கு மறுமையில்) காண்பிக்கப்படும்.

41. பின்னர், மிக நிறைவான கூலியாக அவன் கூலி கொடுக்கப்படுவான்.

42. (நபியே!) இறுதியாக மீள்வதும் நிச்சயமாக உமதிரட்சகனின் பக்கம்தான்.

43. நிச்சயமாக அவனே சிரிக்கவைக்கிறான்; அழவும் வைக்கிறான்.

44. நிச்சயமாக அவன் தான் (உங்களை) மரணிக்கச் செய்கிறான். இன்னும், அவன் உயிர்ப்பிக்கின்றான்.

45 நிச்சயமாக அவன் தான் (உங்களை) ஆண், பெண் ஜோடிகளாக படைக்கின்றான்.

46. (ஒரு துளி) இந்திரியத்திலிருந்து அது (கர்ப்பத்தில்) ஊற்றப்படும்போது (உங்களை படைக்கின்றான்).

47. நிச்சயமாக (மரணித்தபின்னர்) மறுமுறை உயிர் கொடுத்து எழுப்புவதும், அவன் மீதே (பொறுப்பாக)இருக்கிறது.

48. நிச்சயமாக அவன்தான் சீமானாக்குகிறான்; இன்னும் (அவன் கொடுத்ததைக் கொண்டு) பொருந்திக் கொள்ளச்செய்கிறான்.

49. அன்றியும், நிச்சயமாக(மகத்தான நட்சத்திரமான) ஷிஃரா உடைய இரட்சகனும் அவன் தான்.

50. நிச்சயமாக முந்தைய ஆ(து கூட்டத்)தை அழித்தவனும் அவன்தான்.

51. இன்னும், ஸமூதையும் (அழித்தான்; அவர்களில் ஒருவரையும்) அவன் விட்டு வைக்கவில்லை.

52. (இவர்களுக்கு) முன்னர் நூஹ்வுடைய சமூகத்தாரையும், (அழித்தவன் அவன்தான்.) நிச்சயமாக, அவர்கள் தாம் பெரும் அநியாயக்காரர்களாக, மற்றும் மிகுந்த வரம்பு மீறியவர்களாக இருந்தார்கள்.

53. தலைகீழாக புரட்டப்பட்ட (லூத்தின் சமூகத்தார் வாழ்ந்த இடத்)தையும் அவன்(மேலாகத் தூக்கிக்)கீழே வீழ்த்தினான்.

54. (அவர்கள் அழிவுற்ற நேரத்தில்) அதனைச் சூழ்ந்துகொள்ள வேண்டிய (வேதனையான)து (முற்றிலும்) சூழ்ந்துகொண்டது.

55. (ஆகவே, மறுமையை நிராகரிக்கும் மனிதனே!) நீ உன் இரட்சகனின் அருட்கொடைகளில் எதனைத்தான் ஐயம் கொள்வாய்?

56. இவர் முந்தைய எச்சரிக்கையாளர்களி(ன் இனத்தி)லுள்ள ஓர் எச்சரிக்கையாளரே.

57. நெருங்கக்கூடியது (யுக முடிவு காலம்) நெருங்கிவிட்டது.

58. அல்லாஹ்வைத் தவிர அதனை வெளிப்படுத்தக்கூடியது எதுவும் இல்லை.

59. இச்செய்தியிலிருந்துநீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்களா?

60. (இதனைப் பொருட்படுத்தாது) நீங்கள் சிரிக்கவும் செய்கின்றீர்கள்! நீங்கள் அழாமலுமிருக்கின்றீர்கள்!

61. (இதனைப்பற்றி) நீங்கள் அலட்சியமுடையோராகவும் இருக்கின்றீர்கள்.

62. ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குச் சிரம்பணியுங்கள்; மேலும் (அவனையே) வணங்குங்கள்.

---

அத்தியாயம் : 54

## அல் கமர் _ சந்திரன்

வசனங்கள் : 55 மக்கீ ருகூஃகள் : 3

---

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).

1 மறுமைநாள் நெருங்கிவிட்டது; (அதுபற்றித் தெரிவிக்க) சந்திரனும் பிளந்துவிட்டது.

2 அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்டபோதிலும், (அதனை) அவர்கள் புறக்கணித்துவிட்டு, இது (நாள்தோறும்) தொடர்ந்துவரும் சூனியம் என்றும் கூறுகின்றனர்.

3. அன்றியும், அதனை அவர்கள் பொய்யாக்கிவிட்டனர்; தங்களின் மனோ ஆசைகளையே பின்பற்றுகின்றனர்; (அவர்கள் எவ்வாறு நடந்துகொண்ட போதிலும், வரவேண்டிய) ஒவ்வொரு காரியமும் (அதன தன் நேரத்தில்) நிலைபெறக் கூடியதாகும்.